**<u>நாள் 03.03.2023</u>**

**<u>OS 81/2019 பி.சா1 தூசைராஜ் மீண்டும் அழைக்கப்பட்டு வாதிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1ம் வாதியின் பெயர் ஜார்ஜ் டேவிட் அவரை நாங்கள் டேவிட் என்று கூப்பிடுவோம். 2வது வாதி 1ம் வாதியின் சகோதரர். 2ம் பிரதிவாதி என்னுடைய மனைவி. 1ம் வாதியை சர்ச்க்கு வரும்வகையில் எனக்கு பழக்கம். வழக்கு குறித்து எனக்கு ஆட்சேபனை என்ன என்றால் கடனுக்காகத்தான் கையெழுத்து போட்டு கொடுத்தோம் அதைவைத்து ஒப்பந்தமாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். கையொப்பத்தை பார்த்தால்தான் ஒப்பந்தத்தில் இருப்பது என்னுடையதுதான் என்று சொல்லமுடியும். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஒப்பந்தத்தை நான் பார்க்கவே இல்லை. வாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்க்காமல்தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன். நான் இந்த வழக்கில் எதிர்கோரிக்கை எதுவும் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வாசாஆ1ல் 2வது தரப்பினரின் 2வது கையெழுத்து என்னுடையது. அதற்கு மேலே உள்ள கையெழுத்து என்னுடைய மனைவியுடையது. வழக்கு சொத்துக்கள் எனக்கும் என் மனைவிக்கும் சொந்தமானது. எனக்கு பணத்தேவை இருந்தது. பணத்தேவைக்காக சொத்தை விற்க ஏற்பாடு செய்யவில்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக என் மீது வேறு எந்த வழக்கும் இல்லை. வேறு சொத்து சம்பந்தமாக என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் வழக்கு இருக்கிறது. பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் நாடிமுத்து என்பவரும், குமார் என்பவரும் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அது காசோலை வழக்கு. கிரய ஒப்பந்த வழக்கு என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஜெராக்ஸ் காப்பியை வைத்து கிரய ஒப்பந்த வழக்கை தாக்கல் செய்தார். அந்த வழக்கில் தாக்கல் செய்த கிரய ஒப்பந்தம் நான் எழுதிக்கொடுத்த ஒப்பந்தம்தான். அந்த வழக்கை தாக்கல் செய்த நாடிமுத்துக்கும், இந்த வழக்கின் வாதிகளுக்கும் சம்பந்தம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு பல வருடங்களுக்கு முன்பே அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொத்தை விற்பதாக சொல்லி வேறு யாரிடமும் பணம் வாங்கவில்லை. என்னுடைய கட்சி என்ன என்றால் நான் வாதியிடம் ரூ.40,70,000/- கடன் வாங்கி இருந்தேன். அதில் 12 இலட்சம் ரூபாய் கொடுத்துவிட்டேன். மீதித்தொகை கொடுக்கவேண்டியுள்ளது. வாதி பலபேருடைய

காசோலை மூலமாக என் பெயருக்கும் என் மனைவி பெயருக்கும் பணம் அனுப்பினர் அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. 1ம் வாதியின் அக்கா ஆரோக்கிய மேரியின் பெயரில் இருந்து ரூ.19 இலட்சம் RTGS மூலம் வந்தது. ரூ.40,70,000/-மும் RTGS மூலம் வேறு வேறு நபர்கள் பெயரில் வந்தது. என் வங்கி கணக்கிற்கு 8 இலட்சமும், மீதி பணம் என் மனைவி பெயருக்கும் வந்தது. அதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். முதல் விசாரணை பத்தி 8 ல் கண்டபடி ரூ.8 இலட்சத்தை நான் வங்கியில் இருந்து எடுத்து வாதியிடம் கொடுத்தேன். எதற்காக கொடுத்தேன் என்றால் வட்டிக்காக கொடுத்தேன். 07.12.2017 ம் தேதி அவ்வாறு கொடுத்தேன். ரூ.8 இலட்சத்தை வட்டிக்காக கொடுத்தற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. ரூ.8 இலட்சம் என்பது ரூ40,70,00/-க்கு ஒரு மாத வட்டியாகும். பலநபர்களின் வங்கிகணக்கிலிருந்து என் பெயருக்கு பணம் வந்தது என்ற விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். ரூ40,70,00/-த்தை மாதத்திற்கு ரூ.8 இலட்சம் வட்டி என்று ஒப்புக்கொண்டுதான் வாங்கினேன். என்னுடைய கட்சிப்படி பாக்கித்தொகையை நான் ஒப்புக்கொண்ட வட்டி விகிதத்தில் திருப்பி செலுத்தவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தர வேண்டிய தொகையை நீதிமன்றத்தில் இதுவரை நான் வைப்பீடு செய்யவில்லை. இனிமேலும் வைப்பீடு செய்ய தயாராக இல்லை. நான் சொத்தும் தரவேண்டியதில்லை பணமும் தரவேண்டியதில் என்பதுதான் என் கட்சியா என்றால் நான் தரவேண்டிய பணத்தை வாதி என் வீட்டில் நுழைந்து எடுத்து சென்றுவிட்டார். அவ்வாறு எடுத்து சென்றதற்கான நான் புகார் கொடுத்தேன் ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அந்த புகாரில் இன்று வரை இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை.

வாதிதரப்பு வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.